DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : CC.No.32/2017 | Deposition of Witness for : PW3 |
| Name : ரமேஷ் | Father/Husband Name : ராமச்சந்திரன் |
| Age : 53 | Village : படுக்கப்பத்து |
| Taluk : சாத்தான்குளம் | Calling : டீக்கடை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 26 March 2026.
A2 present. A1 absent. Petition U/s.317 Cr.P.C/355 BNSS field and allowed.

**முதல் விசாரணை :–**

1. நான் தற்போது படுக்கப்பத்தில் குடியிருந்து டீக்கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் 2 ஆவது எதிரியை வழக்கு சம்பவத்தின்போது தெரியும். 1 ஆவது எதிரியை வழக்கு சம்பவத்தின்போது தெரியும். கடந்த 29.05.2014 அன்று மதியம் சுமார் 3 மணியளவில் நானும் மரக்குடியைச் சேர்ந்த விஜயன் என்பவரும் எங்கள் ஊரிலுள்ள இந்தியன் வங்கியின் அருகில் உள்ள EB ஆபிஸ் அருகில் நின்றுகொண்டிருந்தபோது அங்கே பணத்துடன் வங்கிக்கு பணம் பரிமாற்றம் வண்டி வந்தது, அப்போது வங்கியின் மேலாளர் மற்றும் ப.சா.2 முத்துப்பாண்டி ஆகியோர் அந்த வண்டியில் இருந்து பணத்தை கையில் எடுத்துக்கொண்டு வங்கிக்குள் சென்று கொண்டிருந்தனர். அப்போது எதிரிகள் Bajaj Platinum இருசக்கர வாகனத்தில் அங்கே வந்தனர். அப்போது 1 ஆவது எதிரி இருசக்கர வாகனத்தில் இருந்து இறங்கி ப.சா.2 முத்துப்பாண்டியின் முகத்தில் மிளகாய் தூளைத் தடவி அவரிடம் இருந்து பையை பிடுங்கினார். அவர் பையை இருக்கமாக பிடித்திருந்ததால் பையின் கைப்பிடி அந்துவிட்டது. பணப்பை 1 ஆவது எதிரியின் கையில் சென்றது. இந்த சம்பவத்தைப் பார்த்து கொண்டிருந்த நானும் விஜயன் என்பவரும் 1 ஆவது எதிரியை பிடித்துக்கொண்டோம். பின்னர் வங்கியின் மேலாளர் வந்து பணப்பையை எடுத்துக்கொண்டு வங்கிக்குள் சென்றுவிட்டார். பின்னர் காவல்துறையினர் என்னை விசாரித்தார்கள்.

**1 மற்றும் 2 ஆவது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

2. இந்தியன் வங்கியின் உரிமையாளர் நான்தான் என்றால் சரிதான். இந்தியன் வங்கியின் அருகில் உள்ள பேக்கரியின் உரிமையாளரும் நான்தான் என்றால் சரிதான். இந்தியன் வங்கிக்கு பின்புறம் தண்ணீர் போன்ற சாமான்களை வைக்கும் குடோன் வைத்துள்ளேன் என்றால் சரிதான். தண்ணீர் பாட்டில்களை வெளியூர்காரர்கள் வந்து தான் இறக்குவார்கள் என்றால் சரிதான், சம்பவ நடந்த சமயத்தில் பேக்கரி இல்லை, குடோனும் இல்லை, அந்த இடம் தோட்டமாக இருந்தது. இந்தியன் வங்கியின் எதிரில் டீக்கடை உள்ளது என்றால் சரிதான். டீக்கடையில் மிக்சர் போன்ற பொருட்களை வெளியூர்காரர்கள் வந்துதான் கடைக்கு பொருட்களை போடுவார்கள் என்றால் வியாபாரிகள் வெளியூரில் இருந்து வந்து பொருட்களை கொண்டு வருவார்கள். வங்கிக்கு முன்னால் செல்லும் சாலை உடன்குடியில் இருந்து பெரியதாழைக்கும் திசையன்விளைக்கும் செல்லக்கூடிய மெயின்ரோடு என்றால் சரிதான். வங்கி உள்ள இடத்தில் எப்பொழுதும் ஆட்கள் நடமாட்டம் அதிகம் இருக்கும் என்றால் சரியல்ல,


DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2026.03.26 19:41:26 +0530

ஆட்கள் நடமாட்டம் குறைவாக இருக்கும். என்னுடைய கடையில் தினமும் ரூபாய் 10 ஆயிரத்திலிருந்து ரூபாய் 20 ஆயிரத்திற்கு வியாபாரம் நடக்கும் என்றால் சரிதான். என்னுடைய கடையில் எப்பொழுதும் ஆட்கள் நடமாட்டம் அதிகம் இருக்கும் என்றால் ஆட்கள் நிறைய வருவார்கள், என்னுடைய கடையில் சுமார் 4 ஆயிரம் முதல் 5 ஆயிரம் வரை வியாபாரம் நடக்கும். போலீசார் சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் சாயங்காலம் 3 மணியிலிருந்து 4 மணிக்குள் வந்திருப்பார்கள், நேரம் சரியாக ஞாபகம் இல்லை. நான் காவல்துறையினர் வந்தபோது நான் சம்பவ இடத்தில் இருந்தோனா என்றால் சம்பவம் நடைபெற்ற போது சம்பவ இடத்தில் இருந்தேன், காவல்துறையினர் வந்தபோது இல்லை. போலீசார் வந்தபோது விஜயன் என்பவர் அந்த இடத்தில் இருந்தாரா என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. போலீசார் விசாரணையின்போது எதிரிகள் எந்த மாதிரியான சட்டை மற்றும் பேண்ட் அணிந்திருந்தார்கள் என்பது குறித்து காவல்துறையினர் என்னிடம் விசாரித்தார்களா என்றால் இல்லை, எதிரிகள் பைக்கில் வந்தார்களா அல்லது எவ்வாறு வந்தார்கள் என்று மட்டும் விசாரித்தார்கள். ப.சா.2 பணம் எடுத்து வந்த பை எந்த கலர் என்றால் சம்பவம் நடைபெற்று 10 வருடத்திற்கு மேல் ஆகிவிட்டதால் சரியாக ஞாபகம் இல்லை, Brown colour Leather பையாக இருந்திருக்கலாம். முத்துப்பாண்டி என்பவரின் கையில் பாக்ஸ் எதுவும் இல்லை என்றால் சரிதான். முத்துப்பாண்டி எந்தவிதத்தில் எந்த பை வைத்திருந்தார் என்ற கோணத்தில் போலீசார் என்னிடம் விசாரித்தார்களா என்றால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. வங்கியின் மேனேஜர் யார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் அவரது பெயர் ஜெரின் ஆகும். வங்கியின் மேனேஜர் எத்தனை மணிக்கு பணப்பையை எடுத்துக்கொண்டு வங்கிக்குள் சென்றார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் சம்பவம் நடைபெற்றபோது அவர் பையை வாங்கிக்கொண்டு உள்ளே என்றார், மதியம் சுமார் 3 மணிக்கு மேல் இருக்கும். போலீசார் என்னை என்றைக்கு விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடந்த அடுத்த நாள் என்னை விசாரித்தார்கள். எங்கு வைத்து என்னை போலீசார் விசாரித்தார்கள் என்றால் என்னுடைய கடையில் வைத்து போலீசார் விசாரித்தார்கள். என்னுடைய கடையில் எத்தனை நபர்கள் வேலை பார்த்தார்கள் என்ற விபரத்தை போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் இல்லை. டீக்கடையை நான் யார் பெயரில் வைத்து நடத்தி வருகிறேன் என்றால் என்னுடைய மகன் பெயரில் வைத்து நடத்தி வருகிறேன். டீக்கடை நடத்துவதற்கான உரிமம் பெற்றுள்ளேனா என்றால் பெற்றுள்ளேன். ஒரு நபரை பிடித்ததாக நான் என்னுடைய விசாரணையில் கூறியுள்ளேன், அவருக்கு ஏற்பட்ட காயம் என்னால் ஏற்பட்டது என்றால் நான் அடிக்கவில்லை, வங்கியில் கொள்ளை முயற்சியில் ஈடுபட்டதால் ஊர்மக்கள் அடித்தார்கள். ஊர்மக்கள் சுமார் 50 நபர்கள் வந்தார்களா என்றால் சுமார் 15 நபர்கள் வந்தார்கள். 15 வருடத்திற்கு முன்பு வங்கி வாரத்திற்கு எத்தனை நாட்கள் இயங்கியது என்றால் வாரத்தில் எல்லா நாட்களும் இயங்கி கொண்டு இருந்ததாகத்தான் எனக்கு ஞாபகம் உள்ளது. 1ஆவது எதிரியை யார் வங்கி மேனேஜரிடம் ஒப்படைத்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் நானும் ஊர் மக்கள் சுமார் 10 முதல் 15 நபர்கள் சேர்ந்து 1ஆவது எதிரியை பிடித்து ஒப்படைத்தோம், மேலாளர் அவரை வங்கிக்குள் உட்கார வைத்திருந்தார். வங்கியில் வாடிக்கையாளர்கள் யாரெல்லாம் இருந்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் 3 மணிக்கு மேல் வாடிக்கையாளர்கள் யாரும் வங்கியில் இருக்க மாட்டார்கள். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் காலகட்டத்தில் வங்கி பணம் இல்லாமல் சுமார் 6 மாதம் மூடிக்கிடந்தது என்றால் சரியல்ல. 1ஆவது எதிரியை பிடித்தவுடன் ஊர்மக்கள் இணைந்து 1ஆவது எதிரியை சோதனையிட்டோமா என்றால் இல்லை. என்னுடைய கடை மெயின்ரோட்டில் இருப்பதால் போக்குவரத்துக்கு வருபவர்களும் என்னுடைய கடைக்கு வருவார்கள் என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் சம்பவ



DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2026.03.26 19:41:33 +0530

இடத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல. முத்துப்பாண்டி பணப்பையை கொண்டு வந்தார் என்று நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. என்ன காரணத்திற்காக வங்கியை 3 நாட்கள் திறந்திருந்தார்கள் மற்ற நாட்களில் மூடியிருந்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் Deposit குறைவாக இருந்ததால் குலசேகரன்பட்டினத்தின் கிளை அமைப்பாக செயல்பட்டு வந்தது, எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. நான் எதிரியை பிடித்து வைத்திருந்ததாகவும், ஊர்மக்கள் இணைந்து எதிரியை அடித்ததாகவும், வங்கி மேலாளர் பணப்பையை வாங்கிக் கொண்டு சென்றார் என்று நான் சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. நான் அ.இ.அ.தி.மு.க கட்சியில் ஒன்றிய கவுன்சிலராக இருந்தேன் என்றால் சரிதான். என்னுடைய அப்பா வழக்கு சம்பவ சமயத்தின்போது பஞ்சாயத்து தலைவராக இருந்தார் என்றால் சரிதான்.

3. டீக்கடையில் ஏற்பட்ட தகராறில் நான் மற்றும் ஊர்மக்கள் சேர்ந்து எதிரியை காயப்படுத்தி எதிரி செத்துப்போவார் என்று நினைத்து நான் எதிரியை கடை முன்பாக போட்டுவிட்டு சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல, எதிரிகளை பிடித்து வங்கிக்குள் உட்கார வைத்திருந்தோம். பின்பு என்னுடைய தகப்பனாரின் அரசியல் பலத்தை பயன்படுத்தி வங்கி எங்களுடைய கட்டிடத்தில் இயங்கி வந்ததால் மேனேஜரை கட்டாயப்படுத்தி எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. நடக்காத சம்பவத்திற்கு என்னுடைய தகப்பனாரின் ஏற்பாட்டின்பேரில் மேனேஜரைப் பயன்படுத்தி கற்பனையாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** : இல்லை

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V — Digitally signed by DEVI RAKSHA M V Date: 2026.03.26 19:41:40 +0530

Judicial Magistrate, Sathankulam.